<u>செய்தி வெளியீடு எண்.735</u> <u>நாள்.19.10.2009</u>

**தமிழ் நாடு மாநில ஹஜ் குழு**
**சென்னை–600 034.**

## <u>செய்தி வெளியீடு</u>

சவூதி அரசின் முடிவின் பேரில் 2009 ஆம் ஆண்டு ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்பவர்கள் பன்றிக் காய்ச்சல் (Swine Flu)/இன்புலியன்ஷா தொடர்பான அறிகுறிகள் ஏதுமில்லை என்ற சான்றிதழ் பெற்ற பின்னரே புனிதப் பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். சென்னை மாநகராட்சியைச் சார்ந்த மருத்துவ அலுவலர்கள் மூலம் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் அனைத்து பயணிகளுக்கும் பயணம் குறித்த ஆவணங்களை அளிக்கும் முன்னர் சென்னை, சூளைமேட்டில் அமைந்துள்ள ஹஜ் இல்லத்தில் இந்நோய்களுக்கான அறிகுறிகள் குறித்த மருத்துவப் பரிசோதனை/ஆய்வு மேற்கொண்டு உரிய படிவத்தில் சான்றிதழ் அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி/அரசு மருத்துவர்கள் முன் ஆஜராகி பன்றிக் காய்ச்சலுக்கான அறிகுறிகள் ஏதுமில்லை என உரிய படிவத்தில் சான்றிதழ் பெற்றால் மட்டுமே புனிதப் பயணிகள் மட்டுமே விமானத்தில் ஏறி புனிதப் பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்படுவர்; அவ்வாறு பெறாதவர்களின் புனிதப் பயணம் ரத்து செய்ய நேரிடும். ஹஜ் பயணிகள் அவரவர்களுக்காக குறிப்பிடப்பட்ட நாட்களில் ஹஜ் இல்லத்தில் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்வதற்கான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளும்முன்பு அங்குள்ள மருத்துவ அலுவலர்களிடம் மருத்துவ பரிசோதனை/ஆய்வு மேற்கொண்டு உரிய படிவத்தில் சான்றிதழை தவறாமல் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2. மருத்துவர்களினால் பன்றிக் காய்ச்சலுக்கான மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு உரிய படிவத்தில் சான்றிதழ் பெறாத புனிதப் பயணிகள் <u>கண்டிப்பாக</u> விமான பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். இதனால் ஏற்படும் பாதிப்புகளுக்கும்/

சிரமங்களுக்கும் மாநில ஹஜ் குழு பொறுப்பாகாது என்பதை புனிதப் பயணிகள் அனைவரும் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். எனவே புனிதப் பயணம் மேற்கொள்ளும் அனைத்து பயணிகளும் அவரவர்களுக்கு குறிப்பிடப்பட்ட நாட்களில் பன்றிக் காய்ச்சல் குறித்த மருத்துவ பரிசோதனை/ஆய்வு மேற்கொண்டு இந்நோய்க்கான அறிகுறிகள் ஏதும் இல்லை என உரிய படிவத்தில் சான்றிதழ் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**3.** பன்றிக் காய்ச்சல் பரிசோதனைக்காக நியமிக்கப்பட்ட ஹஜ் இல்லத்தில் அரசு மருத்துவ அலுவலர்கள் முன் ஆஜராகி உரிய படிவத்தில் சான்றிதழ் பெறவேண்டும். பயணிகள் அவ்வாறு சான்றிதழ் கிடைக்க தவறி விட்டாலும், ஆஜராகத் தவறினாலும் ஹஜ் பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள். இதனால் பயணிகளுக்கு ஏற்படும் சிரமங்களுக்கு மாநில ஹஜ் குழு எந்த வகையிலும் பொறுப்பாகாது என தெரிவித்துக் கொள்கிறோம்.

**உறுப்பினர்-செயல் அலுவலர்.**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.